**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.239/2018</u>**

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ம் நாள் செவ்வாய் கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஜெ.நாகராஜன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மீனாகுமாரி | தந்தை/கணவர் பெயர் | : |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 07.03.2023

**P.W. : 1**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நான் TIIC வங்கியில் கிரைய ஒப்பந்த சொத்திற்காக கட்டிய தொகை 7 லட்சம் ஒன்றும், 7 1/2 லட்சம் ஒன்றும் ஆக மொத்தம் 14 1/2 லட்சம் எங்களிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். அந்த தொகை என் அம்மா பெயரில் ஒரு தொகையும் மற்றும் எனது பெயரில் ஒரு தொகையும் செலுத்தினார்கள். என் பெயரில் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் செய்யும்போது சாட்சிகளை வைத்து பணத்தை கொடுக்கவில்லை என்றால் சரிதான். கிரைய தொகைக்கு பிறகு கூடுதலாக பணம் கொடுக்கும்போதும் யாரையும் சாட்சியாக வைத்து பணம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டதுக்கு பிறகு சொத்தை கிரையம் செய்து கொடுக்க

முடியாத நிலையில் எங்களுக்கு கிரைய தொகையை வட்டியுடன் கொடுக்க ஆவணம் எதுவும் எழுதிக்கொடுத்தார்களா என்றால் வாய் வார்த்தையாக மட்டுமே சொன்னார்கள். வா.சா.ஆ.1ல் கிரைய ஒப்பந்த பத்திரத்தில் 2வது பக்கத்தில் இரண்டு முறை பிரதிவாதி வாதிக்கு பணம் கொடுப்பதாக எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.1ல் கிரைய ஒப்பந்த பத்திரத்தில் வட்டி கொடுப்பதாக சொல்லி எழுதிக் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தை யார் எழுதினார்கள் என்றால் பத்திர எழுத்தர் தான் எழுதினார். அந்த வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரத்தை பத்திர எழுத்தர் எழுதிக் கொடுத்ததாகவோ அல்லது நாங்கள் எழுதிக் கொடுத்ததாகவோ இதில் கண்டிருக்கவில்லை என்று சொன்னால் பத்திர எழுத்தர் தான் எழுதிக் கொடுத்தார். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரத்தில் சாட்சியாக கையொப்பம் செய்தவர்கள் யார் என்றால் திலகவதி அவர்களின் மகன் செந்தில்ராஜ் 1வது சாட்சியாகவும் அதில் நான் 2வது சாட்சியாகவும் கையெழுத்து செய்துள்ளேன். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரத்தில் சாட்சியாக கையொப்பம் செய்தவர்களின் தகப்பனார் பெயரோ, முகவரியோ எதுவும் அதில் கண்டிருக்கவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரத்தில் சாட்சிகளாக உள்ள கையெழுத்துக்கள் அனைத்தும் நாங்களாகவே மோசடியாக செய்துக் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. கிரைய தொகை எங்களுக்கு எப்படி கிடைத்தது என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி எங்களிடம் தொகை எதுவும் வாங்கவில்லை என்று சொன்னாலும் நாங்கள் தான் பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யாக இந்த வழக்கை தாக்கல்

செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. 13.12.2017 ல் 3 லட்சம் ரொக்கமாகவும் 28.12.2017 ல் 5 லட்சமும், 20.01.2018 ல் 6 லட்சமும், 15.02.2018 ல் 4 லட்சமும், 25.02.2018 ல் 5 லட்சமும், 10.03.2018 ல் 3 லட்சமும், 30.03.2018 ல் 26 லட்சமும் எங்களிடம் ரொக்கமாக பணம் கொடுத்துள்ளார்கள் என்று சொன்னாலும் அதற்கு 13.12.2017 ல் ரசீதும் வாங்கியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. மே 2016 முதல் டிசம்பர் 2017 வரை 20 மாதங்களுக்கு வாடகை ரூபாய் 20 ஆயிரம் வீதம் நாங்கள் அந்த கிரைய சொத்தில் வாடகை வாங்கியுள்ளோம் என்றால் நாங்கள் 10 மாதம் மட்டும் தான் வாடகை வாங்கியுள்ளோம். நாங்கள் ரொக்கமாக 48,35,000/- கிரைய சொத்தில் இருந்து வாடகையாக 4 லட்சமும் ஆக மொத்தம் 52,35,000/-மும் பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் ரூபாய். 22,65,000/- மட்டுமே பெற்றுளோம். அந்த 10 மாத வாடகை தொகையான 2 லட்சத்தை மேற்சொன்ன பணத்தில் சேர்க்கவில்லை. வாடகை தொகையும் சேர்த்து தான் பேசியது என்று சொன்னாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கிரைய ஒப்பந்தம் சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். போலீசார் இருதரப்பிலும் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். பிரதிவாதி எங்களிடம் கடன் தொகையை நேர் செலுத்திவிட்டதால் இந்த வழக்கை எடுக்க முடியாது என்று எங்களிடம் கூறினார்களா என்றால் இல்லை. காவல் துறையினர் என்னையும் என் அம்மாவையும் விசாரித்துவிட்டு பிரதிவாதி பணத்தை கொடுத்துவிட்டார்கள் என்று கூறி வழக்கை முடித்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளுமாறு சொன்னார்கள். பிரதிவாதியின் வழக்கறிஞர் எனக்கு

வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தாரா என்றால் இல்லை. 16.06.2018 ல் பிரதிவாதியின் தரப்பில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றும் அதனை நான் பெற்றுக் கொண்டும் இல்லை என்று கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் பிரதிவாதி தொகை முழுவதையும் செலுத்திவிட்டதாகவும் நாங்கள் தான் ரூபாய்.35,000/- பணம் கொடுக்க வேண்டும் என்று கண்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி தொகை முழுவதையும் எங்களிடம் கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னாலும் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.